செய்தி வெளியீடு எண்.65/2016 நாள். 31.10.2016

# தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு தாட்கோ ஆன்லைன் மூலம் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

****

திட்டம் மற்றும் விண்ணப்பிக்க போதுமான தகுதியின் விபரம்.

1.அ) மகளிர் நிலம் வாங்குதல் – பெண்களுக்கு மட்டும் ஆ)நிலம் மேம்படுத்துதல் – இருபாலருக்கும்

வயது வரம்பு 18 முதல் 55 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.00 இலட்சம் ஆகும்.

2) தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

அ)பெட்ரோல், டீசல் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைத்தல். ஆ) தொழில் முனைவோர் திட்டங்கள் :

வயது வரம்பு 18 முதல் 65 வரை வாகனத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர் ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge மேலோப்பம் பெற்றிருக்க வேண்டும். பெட்ரோல், டீசல் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ஏதும் இல்லை.

3) அ. இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம்

வயது வரம்பு 18 முதல் 45 வரை குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.00 இலட்சமாகும். வாகனத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர் ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge மேலோப்பம் பெற்றிருக்க வேண்டும்.

ஆ. மருத்துவமனை, மருந்துக்கடை, கண்கண்ணாடியகம், முடநீக்க மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல் மேம்படுத்துதல் Clinic, Pharmacy, Opticals, Physiotheraphy, Medical Laboratory Formation and Development.

மருத்துவமனை அமைக்கும் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ஏதும். இல்லை. இதற்கு அரசு அங்கீகார நிறுவனத்தில் உரிய பதிவு செய்திருக்க வேண்டும்.

4.அ) சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி (பெண்கள், ஆண்கள், இருபாலரும், திருநங்கைகள் மற்றும் மாற்றுதிறனாளிகள்)

ஆ) சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி (பெண்கள், ஆண்கள், இருபாலரும், திருநங்கைகள் மற்றும் மாற்றுதிறனாளிகள்)

18 முதல் 65 வரைகுடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.2.00 இலட்சமாகும். குறைந்தபட்சம் 5 எண்ணம் வரை ஆதிதிராவிடர்கள் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.

5. மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

இத்திட்டத்தில் ஆதரவற்ற விதவைகள் மாற்றுத் திறனாளிகள், 30 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு வயது வரம்பு இல்லை.

6. மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி

இத்திட்டத்தில் விதவைகள் மாற்றுத் திறனாளிகள் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மகளிர் / ஆடவர், திருநங்கைகள் நலிந்த கலைஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு வயது வரம்பு இல்லை.

7. தாட்கோ தலைவர் விருப்புரிமை நிதி

இத்திட்டத்தில் விதவைகள் மாற்றுத் திறனாளிகள் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மகளிர் / ஆடவர், திருநங்கைகள் நலிந்த கலைஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு வயது வரம்பு இல்லை.

8. இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி (Civil Service Main Exam)

21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 3.00 இலட்சமாகும்.

9. சட்டப்பட்டதாரிகளுக்கு நிதியுதவி

வயது வரம்பு 21 முதல் 45 வரை

10. தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி–1 முதல்நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி (TNPSC Group-1)

21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 3.00 இலட்சமாகும்.

11. பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்களுக்கு நிதியுதவி

வயது வரம்பு 25 முதல் 45 வரை ஆகும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு இத்திட்டத்திற்கு இல்லை.

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்புபவர்கள் http://application.tahdco.com என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யும்போது விண்ணப்பதாரர் பற்றிய விபரங்களுடன் குடும்ப அட்டை / இருப்பிட சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று / கல்வி தகுதி மற்றும் வயதிற்கான ஆதாரச் சான்றிற்கு (பள்ளி மாற்றுச் சான்று / வாக்காளர் அட்டை / ஓட்டுநர் உரிமம் / பான்கார்டு / ஆதார் அட்டை / மதிப்பென் சான்று) இவற்றில் ஏதாவது ஒன்றையும் மற்றும் TIN நம்பர் உள்ள நிறுவனத்திடமிருந்து பெற்ற விலைப்புள்ளி, திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிட்டு திட்ட அறிக்கை மற்றும் புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

நிலம் வாங்கும் திட்டத்திற்கு மூலப்பத்திரம், விற்பனை உடன்படிக்கை பத்திரம், வில்லங்க சான்று, சர்வே எண், சிட்டா, அடங்கல், நில பத்திரம் மற்றும் நிலம் விற்பரவது சாதி சான்று விபரங்களை பதிவு செய்து ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்களின் வசதிக்காக தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் ரூ.20/– செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் முனைவர்.இல.சுப்ரமணியன்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்.

---

செய்தி வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.